

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 02-11-2025


# எடப்பாடி எதனால் தோற்கிறார்?

‘துரோகிகளால்தான் 2021 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வர முடியவில்லை’ என்று திருவாய் மலர்ந்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. இதைக் கேட்டு அ.தி.மு.க.வினரே சிரிக்கிறார்கள். துரோகிகளால் அல்ல, ‘தன்னால்’ தோற்றவர் பழனிசாமி என்பதை அந்தக் கட்சித் தொண்டர்களே அறிவார்கள்.

**ஜெயலலிதா, இறந்து போனார். சசிகலா, சிறைக்குப் போனார். பழனிசாமி, ஊர்ந்து போனார். அ.தி.மு.க. தொண்டர்கள் நொந்து போனார்கள். கட்சி தோற்றுப் போனது. இதுதான் அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்.**

ஆணவத்தால், திமிரால், அளவுக்கு மீறிய தான்தோன்றித் தனத்தால் தோற்றவர் பழனிசாமி. சசிகலாவுக்கு ஒழுங்காக விசுவாசம் காட்டியவர் என்ற ஒரே காரணத்துக்காக கூவத்தூரில் நியமிக்கப்பட்டவர் பழனிசாமி. சரியாகச் சொன்னால் அவர் ஒரு ‘நியமன’ முதலமைச்சர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அல்ல. ஆனால் அவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்ததும் தன்னை ஜெயலலிதாவாக நினைத்துக் கொண்டார். அப்படித்தான் நடந்தார். தன்னை எம்.ஜி.ஆராக நினைத்துக் கொண்டு நகர்வலம் வரத் தொடங்கினார். சேலம் மாவட்டத்திலேயே அவர் செல்லாக் காசு என்பதை சேலம் மாவட்ட அ.தி.மு.க.வினரே ஒப்புக் கொள்வார்கள்.

1990ஆம் ஆண்டு சேலம் மாவட்டச் செயலாளர் ஆன பழனிசாமியின் பதவியை சில ஆண்டுகளிலேயே ஜெயலலிதா பறித்தார். சேலம் புறநகர் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் பதவி பழனிச்சாமிக்குத் தரப்பட்டது. சில ஆண்டுகளில் அதுவும் பறிக்கப்பட்டது.2003 ஆம் ஆண்டு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆனார் பழனிசாமி. சில ஆண்டுகளில் அந்தப் பதவியும் ஜெயலலிதாவால் பறிக்கப்பட்டது. 2008 இல் மீண்டும் பதவி தரப்பட்டது. அது மீண்டும் பறிக்கப்பட்டது. இதெல்லாம் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு நன்கு தெரியும்.

**ஏதோ ஒன்று, தன்னை ஏதோ ஒன்றாக நினைத்துக் கொண்டது என்பார்களே! அப்படி நினைத்துக் கொண்ட பொழைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த தேர்தல்தான் 2021 சட்டமன்றத் தேர்தல் ஆகும்.**

‘நியமன’ டம்மியை ‘மம்மி’யாக ஏற்க மாட்டோம் என்று பெரும்பாலான அ.தி.மு.க. வாக்காளர்களே, பழனிசாமிக்கு கடந்த தேர்தலில் வாக்களிக்கவில்லை. அதுதான் உண்மை. அந்த வாக்கு விழுக்காடு, நடைபெற இருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் இன்னும் பாதியாக ஆகிவிடும் என்பதே முழு உண்மை. தன் கைவசம் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதியை பழனிசாமி இழந்து உட்காரப் போகிறார் என்பதே உண்மை.

இது தெரிந்துதான், தன்னைத் தானே தலைவராகக் காட்டிக் கொள்ள பச்சை பஸ் எடுத்துக் கிளம்பினார். பசப்பு வார்த்தைகளைப் பேசினார். அழைத்துவந்த அ.தி.மு.க.வினரே, பழனிசாமி பேச்சை பத்து நிமிடம் நின்று கேட்கவில்லை. பஸ்ஸை சுற்றி போஸ் கொடுத்துவிட்டு, தாங்கள் வந்த பஸ்ஸை நோக்கிப் புறப்படத் தொடங்கி விட்டார்கள்.

‘நான்தான் முதலமைச்சர் வேட்பாளர்’, ‘எனக்குத்தான் செல்வாக்கு இருக்கிறது’, ‘என் பெயரை அறிவியுங்கள்’ என்று பா.ஜ.க. தலைமைக்குச் சொல்வதற்காக பழனிசாமி தொடங்கிய பயணம், பல்லிளித்துவிட்டது. பயணத்தைப் பாதியில் நிறுத்தி விட்டு பம்மாத்து காட்டிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

இந்தப் பயணத்தின் மூலமாகத் தெரியவந்தது என்னவென்றால், மக்கள் செல்வாக்கு மட்டுமல்ல, அ.தி.மு.க. தொண்டர்கள் செல்வாக்கும் அவருக்கு இல்லை என்பதுதான். அ.தி.மு.க. கொடியை வைத்துக் கொண்டே, அவருக்கு கருப்புக் கொடி காட்டப்பட்டுள்ளது.

**நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் தோற்றவர்தான் பழனிசாமி. தென்சென்னை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, நெல்லை, வேலூர் ஆகிய 7 தொகுதிகளில் அவருக்கு டெபாசிட் போய்விட்டது. 12 தொகுதிகளில் மூன்றாவது இடத்துக்கு பழனிசாமியின் கட்சி போனது. கன்னியாகுமரி தொகுதியில் நான்காவது இடம் போனது பழனிசாமியின் கட்சி. இதெல்லாம் எதைக் காட்டுகிறது? பழனிசாமி தலைமை நிராகரிக்கப்பட்டது என்பதைத் தான்.**

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்குகளைக் கவனியுங்கள். கன்னியாகுமரி (4.02 விழுக்காடு), திருநெல்வேலி (8.39 விழுக்காடு), ராமநாதபுரம் (8.99 விழுக்காடு), மத்திய சென்னை (9.80 விழுக்காடு) என 4 தொகுதிகளில் ஒற்றை இலக்கமாக வாக்கு வங்கி சுருங்கியது. 9 தொகுதிகளில் 14 விழுக்காட்டுக்குக் கீழே வாக்குகளை வாங்கி இருக்கிறது. இதைவிட மோசமாகத் தான் வரப்போகும் சட்டமன்றத் தேர்தலும் பழனிசாமியின் கட்சிக்கு கிடைக்கப் போகிறது. மக்களவைத் தேர்தல் வாக்கு விவரங்களின்படி 8 சட்டசபைத் தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. முன்னணியில் இருக்கிறது.

**அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி என்று சிலர் இன்று போட்டுக் கொண்டிருக்கும் கணக்குகள் அனைத்தும் ஜெயலலிதா காலத்துக் கணக்குகள் ஆகும். பழனிசாமி, ஜெயலலிதா அல்ல என்பது 2019 முதல் வாங்கிய வாக்கு விழுக்காடுகளை வைத்துப் போட்டுப் பாருங்கள். ‘அ.தி.மு.க.வுக்கு 28 விழுக்காடு, 30 விழுக்காடு இருக்கிறது’ என்று சில அரைகுறைகள் ஊடகங்களில் உட்கார்ந்து பேசி தன்னை ஏமாற்றிக் கொள்வது மட்டுமல்ல, ‘பத்து தோல்வி’ பழனிசாமியையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.**

**நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை 234 சட்டமன்றத் தொகுதி வாரியாக பகுத்துப் பார்த்தால் 222 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. இப்படி அ.தி.மு.க.வின் வாக்குகளை மொத்தமாகச் சரித்தார் பழனிசாமி. இதெல்லாம் எதைக் காட்டுகிறது? பழனிசாமி தலைமை நிராகரிக்கப்பட்டது என்பதைத் தான்.**

2019 - நாடாளுமன்றத் தேர்தல், 2019 - சட்டமன்ற இடைத்தேர்தல், 2019 ஆம் ஆண்டில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2023 - ஈரோடு இடைத்தேர்தல், 2024 - நாடாளுமன்றத் தேர்தல், 2024 - விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் - ஆகிய அனைத்துத் தேர்தல்களிலும் தோற்றவர்தான் பழனிசாமி. அவர் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே தோற்றார். இவை அனைத்தும் எதைக் காட்டுகிறது. பழனிசாமியை ஒரு மனிதராகவே மதிக்கவில்லை என்பதைத்தானே?

பழனிசாமி தனது தகுதி இன்மையால் தோற்கிறார். அதனை அவர் முதலில் உணர வேண்டும். அதன் பிறகு உளறலாம்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி மற்றும் நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.10.2025) முகாம் அலுவலகத்தில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (நெய்வேலி) முன்னாள் துணைத் தலைவர் கோ.பழனி – ப.அஞ்சுகம் தம்பதியரின் மகன் ப.அக்னீஸ் – வி.எஸ்.ஜிஷா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான முனைவர் க.பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன், லூயிஸ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது – தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற

# அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்துக! நாட்டின் நலன் மீது கவனம் செலுத்துக!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, நவ. 2-**

**தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த சமூக வலைதளப் பதிவொன்றில், “இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அவர்கள் அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று, ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**‘சர்ச்சைப் பேச்சுகளால் பிரதமர் பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது!’**

ஒடிசா, பீகார் என்று எங்கு சென்றாலும், பா.ஜ.க.,வினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்கு தமிழ்நாட்டு மக்களின் முதலமைச்சர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்து கொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மடிக்கணினி

# கொள்முதல் செய்ய மூன்று நிறுவனங்களுக்கு பணி ஆணைகள்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

*சென்னை, நவ.2-*

*கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக மடிக்கணினிகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகின்றன. கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க தமிழ்நாடு அரசு அண்மையில் ஒப்பந்தப் புள்ளி கோரியது.*

*கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக மடிக்கணினிகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.*

*கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க தமிழ்நாடு அரசு அண்மையில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. தமிழ்நாடு அரசின் எல்காட் நிறுவனம் டெண்டர் கோரியிருந்தது.*

*பல்வேறு நிறுவனங்கள் ஒப்பந்தப் புள்ளிகளை அளித்திருந்தன. இந்த நிலையில், மடிக்கணினிகள் கொள்முதல் செய்ய ஏசர், டெல், எச்பி ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வரும் மார்ச் மாதத்திற்குள் 10 லட்சம் மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் கொள்முதல் செய்யப்பட இருக்கின்றன.*

### கலைவாணர் இல்லத் திருமணம்!

# கழக முன்னோடி எம்.தமிழரசு (எ) அச்சு புதல்வி மணவிழா!

## சென்னை – வடபழனி – கிரீன்பார்க் ஹோட்டலில் நடைபெறுகிறது!

**சென்னை, நவ.2–**

**கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் துணைவியாரும் பழம்பெரும் நடிகையுமான டி.ஏ.மதுரம் அவர்களின் சகோதரர் பேத்தியின் மணவிழா, நவம்பர் 3 – திங்கட்கிழமை அன்று, சென்னை வடபழனி கிரீன் பார்க் ஹோட்டலில் நடைபெறுகிறது.**





கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் துணைவியாரும் பழம்பெரும் நடிகையுமான டி.ஏ. மதுரம் அவர்களின் இளைய சகோதரர் டி.ஏ.மணி அவர்களின் மகனும், கழக முன்னோடியுமான கோடம்பாக்கம் எம்.தமிழரசு எனும் அச்சு – டி.பாலவிஜயகுமாரி ஆகியோரின் புதல்வி த.சுபலட்சுமிக்கும் – சென்னை – திருமங்கலம் (நினைவில் வாழும்) ஜி.சத்திய நாராயணன் – திருமதி. எஸ்.மல்லிகா ஆகியோரின் புதல்வர் எஸ்.ஆகாஷுக்கும் நாளை (3.11.2025 – திங்கட்கிழமை) காலை 9.15 மணி அளவில் சென்னை – வட பழனி, கிரீன்பார்க் ஹோட்டல் சேஷ மகாலில் திருமணம் நடைபெறுகிறது.

முன்னதாக இன்று (2.11.2025 – ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிஅளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மணவிழாவிலும், மணவிழா வரவேற்பிலும் கழக முன்னோடிகளும், மணமக்கள் வீட்டாரும், உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.